ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ ஜூலை. 17, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 283 ❖ ரூ.10

## இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியீடு

# தயார்

## தமிழகத்தில் வரும் 25 ஆம் தேதி கலந்தாய்வு தொடங்கும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



சென்னை, ஜூலை.17-

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டதன் மூலம் நாளையே கலந்தாய்வு வைத்துக் கொள்ளலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்தாலும், தமிழக அரசைப் பொறுத்தவரை தயார் நிலையில் இருக்கிறது என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

2023-24 ஆம் ஆண்டுக்கான இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் சேருவதற்கான தகுதி பெற்ற மாணவ மாணவியர்களின் தரவரிசைப் பட்டியலை தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "2023-24 ஆம் ஆண்டுக்கான அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள மொத்த இளநிலை மருத்துவம் 6326 இடங்களும், அரசு பல் மருத்துவ கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி பல் மருத்துவ கல்லூரிகளில் உள்ள மொத்த பல் மருத்துவம் 1768 இடங்களும் உள்ளன.

இந்தாண்டு 7.5% ஒதுக்கீட்டுக்கான அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லுரிகளில் உள்ள மொத்த இளநிலை மருத்துவம் 473 இடங்களும், 7.5% ஒதுக்கீட்டுக்கான அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லுரிகளில் உள்ள மொத்த பல் மருத்துவம் 133 இடங்களும், ஆக மருத்துவ இடங்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்தமாக 606 இடங்களும் உள்ளது.

இந்த எண்ணிக்கையைப் பொறுத்தவரை 2020-2021 ஆம் ஆண்டு இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களும் சேர்ந்து 7.5% இட ஒதுக்கீட்டின்படி 435, 2021-2022 ஆம் ஆண்டு இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களும் சேர்ந்து 7.5% இட ஒதுக்கீட்டின்படி 555ம், இந்தாண்டு 2022-2023 ஆம் ஆண்டு இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களும் சேர்ந்து 7.5% இட ஒதுக்கீட்டின்படி 584ம், ஆக இந்தாண்டு 606 இடங்களாக உயர்ந்து இருக்கிறது.

நிர்வாக ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் (Management Quota) உள்ள மொத்த இளநிலை மருத்துவம் 1509 இடங்களும், நிர்வாக ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி பல் மருத்துவ கல்லூரிகளில் (Management Quota) உள்ள மொத்த பல் மருத்துவம் 395 இடங்களும், தமிழகத்தைப் பொறுத்தவரை அரசு மருத்துவக் கல்லூரிகள் 36, இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி ஒன்றும், சுயநிதிக் கல்லூரிகள் 21, சுயாட்சிக் கல்லூரிகள் (Deemed Universities) 13 சேர்ந்து ஆக 71 மருத்துவக் கல்லூரிகள் தமிழகத்திலேயே இருக்கிறது. ஆக 71 மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மாணவ சேர்க்கை இளநிலை மருத்துவ இடங்கள் 11,475 ஆக இருக்கிறது. பல் மருத்துவ இடங்கள் 2150 ஆக உள்ளது.

### கலந்தாய்வு எப்போது? மா.சு விளக்கம்

இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் கலந்தாய்வை பொறுத்தவரை ஏற்கெனவே ஒன்றிய அரசு வரும் 20ம் தேதி முதல் தொடங்கப்படும் என்று இன்னமும் அதிகாரப் பூர்வமான அறிவிப்பு இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே 17ம் தேதி தொடங்கப்படும் என்று அதிகாரப் பூர்வமான அறிவிப்பு இல்லாமல் தெரிவித்தார்கள். ஒன்றிய அரசும் அந்தந்த மாநில அரசுகளும் ஒரே நேரத்தில் கலந்தாய்வு மேற்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்போது நமது துறையின் சார்பில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கக தேர்வுக் குழு தலைவர் ஆகியோர் இதில் இருக்கிற சிக்கல்களை சம்மந்தப்பட்ட ஒன்றிய அலுவலர்களுக்கு தெரிவித்து இருக்கிறார்கள்.

ஒரே நேரத்தில் இந்த கலந்தாய்வு நடைபெறுமேயானால் மாணவர்கள் ஒன்றிய அரசிலும், மாநில அரசிலும் பிளாக் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இது காலவிரயம் ஆகும் எனவே ஒன்றிய அரசு நடத்தியதற்கு பிறகு 5, 6 நாட்கள் இடைவெளியில் மாநில அரசுகள் இந்த கலந்தாய்வை மேற்கொண்டால் சரியாக இருக்கும் என்கின்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்களும் ஒப்புதல் தந்து இருக்கிறார்கள்.

இந்த நிலையில் 20ஆம் தேதி என்று கலந்தாய்வை மேற்கொள்ள இருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது ஆதாரப் பூர்வமான செய்தி அல்ல என்றாலும், நாம் இன்றைக்கே தயாராக இருக்கிறோம். பட்டியல் வெளியிடப்பட்டதன் மூலம் நாளையே கலந்தாய்வு வைத்துக் கொள்ளலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்தாலும், தமிழக அரசைப் பொறுத்தவரை நாம் தயார் நிலையில் இருக்கிறோம்.

மேலும், ஒன்றிய அரசு வரும் 20ம் தேதி கலந்தாய்வு நடத்துமேயானால், தமிழகத்தில் வரும் 25 ஆம் தேதி கலந்தாய்வு தொடங்கும் என்பதை உங்களின் வாயிலாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

## 65,034 பொறியியல்; 83,223 கலை அறிவியல் மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டம் மூலம் வேலைவாய்ப்பு: முதல்வர் ஸ்டாலின்



சென்னை , ஜூலை.17-

"தமிழகம் முழுவதும் "நான் முதல்வன்" திட்டத்தில் பயின்ற மாணவர்களுக்காக நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 65,034 பொறியியல் கல்லூரி மாணவர்களும், 83,223 கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முகாம் அலுவலகத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி "சத்தியதேவ்" நினைவாக சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் "சத்தியதேவ் லா அகாடமி"-யை (Sathyadev Law Academy) தொடங்கி வைத்து, இலட்சினையை வெளியிட்டார்.

இந்தியாவில் சட்டத்தொழில் புரிவது சாதாரண மக்களுக்கு எளிதான காரியம் அல்ல. அப்படிப்பட்ட வழக்கறிஞர் தொழிலில் குறிப்பிட்ட ஒரு சிலரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். "வழக்கறிஞர் சட்டம்" 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பின்னரே வழக்கறிஞர் தொழில் ஒருமுகப்படுத்தப்பட்டு சட்டப்படிப்பு பரவலாக்கப்பட்டது.

சட்டக்கல்லூரி மாணவர்கள் தேர்வில் இட ஒதுக்கீட்டு சமூக நீதி ஏற்பட்ட பின்னரே, பல்வேறு சமூகங்களிலிருந்தும் வழக்கறிஞர்கள் இத்தொழிலுக்கு வரத்தொடங்கினர். அதிக அளவிலான சட்டக்கல்லூரிகள், சட்டப் பல்கலைக்கழகங்கள் வந்த பிறகும், சட்டப்படிப்பு சாதாரண குடும்பத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு சவாலாகவே உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு "சத்தியதேவ் லா அகாடமி", அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அகாடமியில் சட்ட நிபுணர்கள் / சட்ட ஆசிரியர்களைக் கொண்டு சட்டக்கல்லூரி பாடத்திட்டத்தின் அடிப்படையில், மாணவர்களுக்கு பாடங்களைக் காணொலியில் பதிவு செய்யப்பட்டு "யூ-டியூப்" வலைதளத்தில் பதிவேற்றப்படும். மாணவர்கள் அவற்றை கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து படித்து பயன்பெறலாம். பாடத்திட்ட காணொலி தயாரிப்பதற்கான நிதியை ஜெய்பீம் படத்தயாரிப்பாளரும், நடிகருமான சூர்யாவின் "2D எண்டர்டெயின் மெண்ட்" நிறுவனம் வழங்கிட உள்ளது.

இந்த "சத்தியதேவ் லா அகாடமி"-யை தொடங்கிவைத்து தமிழக முதல்வர் பேசியது: "அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவித்து, அவர்கள் அடுத்து என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்று வழிகாட்டி வருகிறது.

அதுமட்டுமின்றி, ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களை படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு "நான் முதல்வன்" திட்டம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 463 பொறியியல் கல்லூரிகளில் 4,72,972 மாணவர்களும், 861 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 8,51,338 மாணவர்களும் பயனடைந்துள்ளனர். பொறியியல் கல்லூரிகளில் 2022-23-ஆம் ஆண்டு "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 1,15,682 இறுதியாண்டு மாணவர்களுக்கு - Simens, Dassault, Microsoft, IBM, Cisco Autodesk, L&T, TCS, Infosys, NSE போன்ற நிறுவனங்கள் மூலமாக AR/VR, Artificial Intelligence, Machine Learning, Full Stack, Data Analytics, Electric Vehicle Design, Cyber Security, Mutual Funds, Capital Markets, Fintech, Block Chain, Digital Marketing மேலும் இது போன்ற 70-க்கும் மேற்பட்ட திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 2,48,734 இறுதியாண்டு மாணவர்களுக்கு நிறுவனங்கள் மூலமாக, திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, இப்பயிற்சிகளின் மூலமாக மாணவர்கள் அதிகபட்சமாக ஆண்டுக்கு 40 லட்சம் வரையிலான ஊதியத்தில் வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளனர்.

தமிழகம் முழுவதும் "நான் முதல்வன்" திட்டத்தில் பயின்ற மாணவர்களுக்காக நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 65,034 பொறியியல் கல்லூரி மாணவர்களும், 83,223 கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர். எனவே, சட்டம் பயிலும் மாணவர்களுக்கு "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க "சத்தியதேவ் லா அகாடமி" நிர்வாகிகளை முதல்வர் ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் இன்னோசன்ட் திவ்யா, தமிழ்நாடு மாதிரி பள்ளிகளின் உறுப்பினர் செயலர் சுதன், அகாடமியின் இயக்குநர் ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு, ஓய்வு பெற்ற நீதிபதி கே.பி. சிவசுப்பிரமணியன், நடிகர் சூர்யா, 2D நிறுவன முதன்மைச் செயல் அலுவலர் ராஜ்சேகர் கற்பூர சுந்தரபாண்டியன், திரைப்பட இயக்குநர் த.செ.ஞானவேல் ஆகியோர் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செந்தில்பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக இருக்கச் செய்வதால் மக்கள் வரிப்பணம் வீணாகிறது அண்ணாமலை

மதுரை , ஜூலை.17-

**செந்தில்பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சாராக இருக்கச் செய்வதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது என்று மதுரையில் நடந்த விழா ஒன்றில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.**

மதுரை திருநகரில் காமராசர் மக்கள் கட்சி மாநிலப் பொதுக்குழு கூட்டம் மற்றும் காமராசர் பொற்கால ஆட்சி சாதனைகள் என்ற பெயரில் மலர் வெளியீட்டு விழா நடந்தது. மலர் வெளியீட்டு விழாவுக்கு மாநிலச் செயலர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். கலை, இலக்கிய பேரவை தலைவர் பாரி வரவேற்றார். முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் எம்.பி மலரை வெளியிட்டார்.

மலரை பெற்றுக்கொண்டு பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசியதாவது: "காமராசர் ஆட்சி காலத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. காலத்தால் வர்ணிக்க முடியாத வகையில் விவசாயம், பொதுப்பணி துறையில் கக்கன் அமைச்சராக பணிபுரிந்தார். கக்கன் போன்றவர் காமராசருடன் எப்படி எல்லாம் பணி புரிந்தார் என தெரிந்து கொள்ளவேண்டும். அரசியல் என்பது அடிப்படையில் மாறவேண்டும். எதற்காக அரிசியல் நடத்துகிறோம் எனப் புரியவேண்டும்.

முழு அரசியல்வாதிகளாக இருப்பவர்களால் தான் தவறு நடக்கிறது. நாம் கனவு காண்பதுபோல் அரசியல் மாறும். காமராசரின் கனவு மலரும். அரசியலில் நமக்கு நாமே சுய பரிசோதனை செய்யவேணடும். இது எதிர்காலத்தில் நடக்கும்.

காமராசருக்கும், மோடிக்கும் ஒற்றுமை உள்ளது: காமராசர் ஆட்சியில் தொழில் புரட்சி நடந்தது போன்று மோடி ஆட்சியிலும் தொழில் புரட்சி நடக்கிறது. இந்தியா தொழில் வளம் மிகுந்த நாடாக மாறுகிறது. அந்த வகையில் காமராசருக்கும், மோடிக்கும் இடையே ஒற்றுமை உள்ளது.

தமிழகத்தில், காமராசருக்கு நிகராக இல்லை என்றாலும், அவரது அமைச்சரவையில் இருந்தவர்கள் போன்று கூட தற்போதைய அமைச்சர்கள் இல்லை. தந்தை சாராய ஆலை நடத்துகிறார். மகனுக்கு தொழில்துறையில் அமைச்சர் பதவி. முரசொலி மாறன் போன்றவர்கள் இலாகா இல்லாத அமைச்சராக இருந்துள்ளனர். ஆனால் செந்தில்பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சாராக இருக்கச் செய்வதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது. அவருக்காக மொத்த அரசு நிர்வாகம் பின்னால் நிற்கிறது.



காமராசரின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கும்போது, நாமும் மாமனிதர் வாழ்ந்த மண்ணனில் வாழ்கிறோம் என பெருமைப்பட வேண்டும். 80 கோடி மக்கள் 33 வயதுக்கு கீழ் உள்ளனர். இவர்கள் கமராசர் பிறந்த 30 ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்கள் காமராசரை பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். காமராசர் ஐதராபாத், சுவிஸ் வங்கிகளில் இருப்புத் தொகை வைத்திருந்தார் என கருணாநிதி குற்றச்சாட்டினார். அவரை கேவலமாகப் பேசிவிட்டு, தற்போது அவரது பெயரை திமுக இன்று உச்சரிக்கிறது. தமிழ்நாட்டில் அவரது 9 ஆண்டு ஆட்சி காலத்தில் 18 ஆயிரம் பள்ளிகளை திறந்தார்.

2024-ல் மோடி வெற்றி பெறும்போது, இந்தியாவில் நாம் எதிர்பார்க்கும் உண்மையான அரசியல் மாற்றம் ஏற்படும். அரசியல் சுத்தப்படுத்தும் சூழல் உருவாகும். ஊழல்வாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக தென்னிந்திய மாநிலங்களில் இருந்து பாஜகவுக்கு அதிக எம்,பிக்களை கொடுக்கிறோமா என்ற கேள்வி உள்ளது. இந்த முறை தமிழ்நாட்டில் இருந்து 39 எம்.பிக்களை அனுப்பி நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும். மோடி என்ற ஆளுமை இருக்கும்போது, 39 எம்.பிகளை ஏன் அனுப்பி முடியாது. ஜி.கே. வாசன், பொன்.ராதாகிருஷ்ணன் ஆகியோரை மந்திரிகளாக அமரவைக்க வேண்டும். எனது 3 ஆண்டுகால அரசியல் காகிதமாக உள்ளது. நான் இன்னும் ஞானம் பெறவேண்டும். இதை தலைவர்களிடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்." இவ்வாறு கூறினார்.

## மதுரையில் நகரத்தார் இளைஞர் நல சங்க மாநாடு



மதுரை ,ஜூலை.17-

மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நகரத்தார் இளைஞர் சங்கம் நல மாநாடு நம் சமூகத்தின் எதிர்காலத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும், இளைஞர்களின் மேம்பாட்டிற்கும் வழி விடும் வகையில். இந்த மாநாடு ஒக்கூரைச்சேர்ந்த தலைவர் தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது, மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றியவர் தமிழ்நாடு சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் ரகுபதி ஆவார்.

2022 - 2023 பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ,மாணவிகளுக்கு நினைவு பரிசும், சான்றிதழ்களையும் அமைச்சர் ரகுபதி கரங்களால் வழங்கப்பட்டது. உடன் வள்ளியப்பன் தொழில் அதிபர் சென்னை, பட்டிமன்ற பேச்சாளர் தெய்வானை மணிகண்டன், உயர்நீதிமன்ற நீதியரசர் சொக்கலிங்கம் மற்றும் செயலாளர் பழனியப்பன், பொருளாளர் முருகப்பன், துணைத்தலைவர் அண்ணாமலை, இணைச் செயலாளர் சுப்ரமணியன் மற்றும் ஆன்றோர்கள், சான்றோர்கள், அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# குடிசையில் வாழும் மாணவர்களும் மருத்துவக் கல்லூரியில் சேர நீட் தேர்வு தான் காரணம் பொன். ராதாகிருஷ்ணன்

தஞ்சாவூர், ஜூலை. 17-

தஞ்சை மாதாக்கோட்டை அடுத்துள்ள துலுக்கன்பட்டி கிராமத்தில் பாஜ.க. தெற்கு மாவட்ட பொருளாதார பிரிவு சார்பில் காமராஜர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. விழாவில் பங்கேற்ற முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:- தமிழகத்தில் 16,000 பள்ளிகள் இருந்த நிலையில் அதை 32 ஆயிரம் பள்ளிகளாக மாற்றியவர் காமராஜர். 100-க்கு 7 பேர் படித்த நிலையில் அதை 37 பேராக மாற்றியவர் காமராஜர். ஆனால் தமிழகத்தில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. அரசு பள்ளி மூடப்படுகிறது என்று சொன்னால், காமராஜரின் இலவச கல்வியும் மூடப்படுகிறது. ஏழை



மக்களின் எதிர்காலமும் மூடப்படுகிறது.

பொதுவாக எல்லா விஷயங்களுக்கும் சாதகங்கள், பாதகங்கள் என்பது குறித்த வாதங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். பொது சிவில் சட்டம் பற்றிய மசோதாவே வெளியாகாத முன்பு தவறு என்பது கூறுவது எந்த விதத்தில் நியாயம். தமிழகத்தில் காமராஜர் ஆட்சிக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி இல்லாமல் போய்விட்டது. தி.மு.க. மக்களுக்கு நன்மையான ஏதாவது ஒரு திட்டத்தை ஒன்றை வேண்டுமென்று கூறியுள்ளதா?எல்லாமே வேண்டாம் என தான் கூறி வருகிறது. நீட் தேர்வு வேண்டாம் என கூறினார்கள். சாதாரணமாக குடிசையில் வாழக்கூடியவர்களின் குழந்தைகள், மருத்துவக் கல்லூரியில் அட்மிஷன் வாங்குகின்றனர்.

கற்பனை செய்து தான் பார்க்க முடியுமா? நீட் தேர்வு வராவிட்டால், ஏழை மாணவர்களுக்கு சீட் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. காங்கிரஸ் கட்சித் தமிழக தலைவர் கே.எஸ். அழகிரி, தமிழக முதலமைச்சரை உடனடியாக அழைத்துக் கொண்டு, பெங்களூருக்கு சென்று மேகதாதுவில் அணை கட்ட விடமாட்டோம் என்கிற நிலைப்பாட்டையும் சொல்லி, கர்நாடகம் மேகதாதுவில் அணை கட்டாது என்பதையும் உறுதிப்படுத்தி வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### டிஐஜி விஜயகுமார் தற்கொலை தொடர்பாக

# சமூக வலைதளங்களில் அவதூறு கருத்து பதிவிட்ட 8 பேருக்கு காவல்துறை சம்மன்

கோவை , ஜூலை. 17-

டிஐஜி விஜயகுமார் தற்கொலை விவகாரம் தொடர்பாக சமூக வலைதளங்களில் அவதூறு கருத்துகளை வெளியிட்ட 8 பேர் விசாரணைக்கு ஆஜராக கோவை போலீஸார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

கோவை சரக டிஐஜியாக பணியாற்றி வந்தவர் சி.விஜயகுமார். இவரது கட்டுப்பாட்டின் கீழ் கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்கள் உள்ளன. ஜூலை 7 ஆம் தேதி காலை வழக்கம்போல் நடைபயிற்சிக்கு சென்றுவிட்டு காலை 6.50 மணிக்கு தனது முகாம் அலுவலகத்துக்கு வந்தார். பின்னர் தனது பாதுகாவலர் ரவியிடம் இருந்த கைத்துப்பாக்கியை வாங்கி தனக்கு தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சத்தம் கேட்டு சக காவலர்கள் வந்து பார்த்தபோது டிஐஜி விஜயகுமார் தற்கொலை செய்து கொண்டது தெரிந்தது. இதைத்தொடர்ந்து, டிஐஜி விஜயகுமார் தற்கொலைக்கு பணிச்சுமையோ, குடும்பப்



பிரச்சினையோ காரணம் இல்லை என்றும், மருத்துவக் காரணங்களால்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் தமிழக சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி அருண் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த தற்கொலை வழக்கை கோவை ராமநாதபுரம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. தற்கொலை விவகாரம் தொடர்பாக, மறைந்த காவல்துறை அதிகாரி விஜயகுமார் வீட்டுப் பணியாளர்கள், அருகில் வசிப்பவர்கள், அவருடன் பணியாற்றிய காவல்துறையினர் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்த போலீஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து, டிஐஜி விஜயகுமார் தற்கொலை குறித்து அவதூறு பரப்பும் வகையில் யூடியூப், பேஃஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் கருத்து பதிவு செய்தவர்களிடம், எந்த ஆதாரத்தின் அடிப்படையில், அத்தகைய கருத்துகள் பதிவிடப்பட்டது, வேறு ஏதேனும் ஆதாரங்கள் உள்ளதா என்பது குறித்து விசாரிப்பதற்காக 8 பேருக்கு போலீஸார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக மாநகர காவல் துறையினர் கூறும்போது, "கோவை சரக டி ஐ ஜி உயிரிழப்பு தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவரது உயிரிழப்பு தொடர்பாக பல்வேறு தரப்பினர் சில கருத்துக்களை பதிவு செய்தனர்.அதேபோல் சமூக வலைதளங்களிலும் சில சர்ச்சைக்குரிய கருத்துக்களை சிலார் பதிவிட்டனர். இது தொடர்பாக ஏறத்தாழ ஒரு எட்டு பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் நாளை செவ்வாய்கிழமை 18-ம் தேதி ராமநாதபுரம் போலீஸாரிடம் ஆஜராகி அந்த சம்பவம் தொடர்பாக தாங்கள் தெரிவித்த கருத்து குறித்து விளக்கம் அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது," என்றனர்.






காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அம்பாள் சத்திரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவருவ சிலைக்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் .மனீஷ் இ கா ப துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) .பாஸ்கரன் உதவி இயக்குனர் (பொ.) செய்தி மற்றும் விளம்பரத்துறை குலசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். செய்தி மற்றும் விளம்பரத் துறையினர் இந்நிகழ்வை சிறப்பாக செய்திருந்தார்கள்.

# செம்மரக் கடத்தலில் ஈடுப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 25 பேர் கைது ஆந்திர காவல்துறை தகவல்

ஆந்திரா , ஜூலை. 17-

ஆந்திராவில் செம்மரக் கடத்தலில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த 25 பேரை கைது செய்துள்ளதாக அம்மாநில செம்மரக் கடத்தல் பிரிவு எஸ்.பி முரளிதர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஆந்திர மாநில செம்மரக்கடத்தல் பிரிவு கண்காணிப்பாளர் முரளிதர் கூறியது: "சனிக்கிழமை இரவு ஆந்திர மாநிலத்தில் உள்ள அன்னமயா மாவட்டத்தில் செம்மரங்கள் வெட்டிக் கடத்துவதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. அதன்படி, அந்தப் பகுதியில் போலீஸார் தீவிர சோதனையில்



ஈடுபட்டனர்.

அப்போது, அன்னமயா மாவட்ட வனப்பகுதியில் இருந்து செம்மரங்களை வெட்டி கடத்த முயன்ற தமிழகத்தைச் சேர்ந்த 20 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 5 செம்மரக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டது. இதேபோல், சித்தூர் மாவட்டத்தில், செம்மரக் கட்டைகளை வெட்டி கடத்த முயன்ற 5 தமிழர்கள் போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 19 செம்மரக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. செம்மரக் கடத்தலில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட செம்மரக் கட்டைகளின் மதிப்பு சுமார் ரூ.30 லட்சம் ஆகும். இந்த தேடுதல் வேட்டையின்போது தப்பியோடியவர்களைப் பிடிக்க 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறியுள்ளார்.

# உதகையில் ஆர்எஸ்எஸ் கூட்டத்துக்காக விடுமுறை அளித்த பள்ளிக்கு நோட்டீஸ்

உதகை , ஜூலை. 17-

உதகையில் ஆர்.எஸ்.எஸ் கூட்டத்துக்காக விடுமுறை அளித்த பள்ளிக்கு, விளக்கம் கேட்டு கல்வித் துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

நீலகிரி மாவட்டம் உதகையில் முதல் முறையாக ஆர்.எஸ். எஸ். அமைப்பின் தேசிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று வருகிறது. தனியார் பள்ளியில் நடைபெற்று வரும் இந்த கூட்டத்தில், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தேசியத் தலைவர் மோகன் பாகவத் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். ஆலோசனைக் கூட்டம்



நடைபெறுவதால், சம்பந்தப்பட்ட பள்ளிக்கு ஒரு வாரம் தொடர் விடுமுறையை பள்ளி நிர்வாகம் அளித்துள்ளது. இந்த தொடர் விடுமுறையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக, பெற்றோர் சிலர் கல்வித் துறை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். அதனடிப்படையில், விளக்கம் கேட்டுசம்பந்தப்பட்ட பள்ளிக்கு மாவட்ட பள்ளி கல்வித் துறை மூலமாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கீதாவிடம் கேட்டபோது, "உதகையை அடுத்த தீட்டுக்கல்பகுதியில்இயங்கும் தனியார் பள்ளிக்கு கடந்த ஒரு வாரமாக விடுமுறை விடப்பட்டிருப்பதாக புகார்கள் வந்தன. அதன்பேரில், விளக்கம் கேட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது. பள்ளி நிர்வாகம் அளிக்கும் விளக்கத்தின் அடிப்படையில், அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

# தென்காசியில் காங்கிரஸ் சார்பில் காமராஜர் பிறந்த நாள் விழா

தென்காசி ,ஜூலை .17-

தென்காசி நகர காங்கிரஸ் சார்பில் காந்தி சிலை முன்பு காமராஜரின் 121 வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவரும் தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பழனி நாடார் தலைமை வகித்து அலங்கரிக்கப்பட்ட காமராஜரின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



இந்நிகழ்ச்சியில் மாநிலச் செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ், மருத்துவர் சங்கர குமார், பேச்சாளர் ஆய்க்குடி பெரியசாமி, காஜா மைதீன், தேவேந்திரன், பிரபாகரன், சந்தோஷ், பிரபு, நகர பொருளாளர் ஈஸ்வரன், சிறுபான்மை பிரிவு சலீம், தேவராஜன், சித்திக், துரை, கவுன்சிலர்கள் பூமாதேவி, சுப்பிரமணியன், ரபீக், வட்டாரத் தலைவர் பெருமாள், தாயார் தோப்பு ராமர், கண்ணன், கோவிந்தராஜுலு, கதிர்வேல், மாடசாமி, பீர் முகம்மது, நரி சேட், கலை இலக்கியப் பிரிவு அமானுல்லா, சிவாஜி மன்றம் கணேசன், முருகன், வழக்கறிஞர் சீதா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அலாஸ்காவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டரில் 7.4 ஆக பதிவு சுனாமி எச்சரிக்கை



அலாஸ்கா , ஜூலை. 17-

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடலுக்கு அடியில் மையம் கொண்ட இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் 7.4 ரிக்டராகப் பதிவானது. இதனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அலாஸ்கா தீபகற்பத்தின் கடல் பகுதிகளில் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 6.48 மணியளவில், சாண்ட் பாயின்ட் என்ற நகரத்தின் தென்மேற்கு திசையில் 89 கிமீ தொலைவில் 21 கிமீ ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பால்மரில் உள்ள தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் தெற்கு அலாஸ்கா மற்றும் அலாஸ்கா தீபகற்பத்திற்கு சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது. உடனடியாக கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகில் அதிகம் எரிமலை வெடிப்புகள் மற்றும் நிலநடுக்கங்கள் ஏற்படக் கூடிய 'பசிபிக் நெருப்பு வளையம்' என்ற பகுதியின் ஒரு அங்கமாக அலாஸ்கா உள்ளது. கடந்த 1964-ம் ஆண்டு மார்ச் மாதம், அலாஸ்காவில் 9.2 ரிக்டர் அளவிலான மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதுவரை வட அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம் இதுவே. இந்தநிலநடுக்கத்தைத் தொடர்ந்து அலாஸ்கா வளைகுடா, அமெரிக்காவின் மேற்கு கடற்கரை மற்றும் ஹவாய் ஆகிய பகுதிகள் பெரும் சுனாமிப் பேரழிவை சந்தித்தன. இதில் 250-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

# மகாராஷ்டிரா அரசியலில் மீண்டும் பரபரப்பு சரத் பவாரை சந்தித்து ஆசி பெற்ற அஜித் பவார் அணியினர்

மும்பை , ஜூலை. 17-

இரண்டு வார பூசலுக்குப் பின்னர் மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் அணியினர் தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவாரை சந்தித்து ஆசி பெற்றது அம்மாநில அரசியலில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அஜித் பவார் மற்றும் அவரது அணியை சேர்ந்த மூத்த தலைவர் பிரபுல் பட்டேல், ஜிதேந்திரா, ஹசன் முஷ்ரிப் மற்றும் திலீப் வல்சே பாட்டீல் ஆகியோர் சரத் பவாரை நேற்று சந்தித்தனர். இது சரத் பவாரை சமாதானப்படுத்தும் முயற்சியாகக் கருதப்படுகிறது.

ஜூலை 2 ஆம் தேதி அஜித்பவார் தனதுசகாக்கள் 8 பேருடன் மகாராஷ்டிரா அமைச்சரவைக்கு ஆதரவுளித்து தன்னை அக்கூட்டணியில் இணைத்துக் கொண்டார். எதிர்பாராத அந்த முடிவால் என்சிபியில் பிளவு ஏற்பட்டது.

இந்நிலையில் மும்பை ஒய்.பி. செண்டரில் சரத் பவார் நேற்று இருப்பதை அறிந்த அஜித் பவார் தரப்பினர் அவரை சந்தித்தனர். அப்போது



பவாரிடம் அவர்கள் ஆசி பெற்றதாகத் தெரிகிறது.

இந்த சந்திப்பு குறித்து பிரபுல் படேல் செய்தியாளர்களிடம் பேசுகையில், "நாங்கள் அனைவரும் எங்கள் கடவுள் சரத் பவாரிடம் ஆசி பெறுவதற்காக வந்துள்ளோம். பவார் இங்கே இருப்பதை அறிந்து வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டோம்.

தேசியவாத காங்கிரஸ் கட்சி இணைந்திருக்க வேண்டும் என்பதை பவாரிடம் தெரிவித்தோம். ஆனால் அவர் அதற்கு ஏதும் சொல்லவில்லை."என்றார்.

மகாராஷ்டிராவில் இன்று மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

அண்மையில் தான் சரத் பவாரின் அதிகாரபூர்வ இல்லமான சில்வர் ஓக் இல்லத்துக்கு அஜித் பவார் சென்றார். அங்கு அவரது அத்தையும் சரத் பவாரின் மனைவியுமான பிரதீபா பவாரை சந்தித்து நலம் விசாரித்தார். கடந்த 2019-ல் அஜித் பவார் கட்சியில் அதிருப்தி காட்டி தேவேந்திர பட்நவிஸுடன் கைகோத்தபோது பிரதீபா தான் அவரை மீண்டும் என்சிபி-க்குள் ஐக்கியமாக்கினார். இந்நிலையில் இப்போது அத்தை பிரதீபாவை அஜித் பவார் சந்தித்தது, அதன் பின்னர் அஜித் பவார் தலைமையிலான அணியினர் சரத் பவாரை சந்தித்தது கவனம் பெற்றுள்ளது.

முன்னதாக நேற்று அஜித் பவார் தனது ஆதரவு எம் எல் ஏ.,க்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். அப்போது அவர், "நாம் இன்று ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்றுள்ளோம். அதற்காக சரத் பவாருடன் இருக்கும் என்சிபி எம்எல்ஏ.,க்களை விமர்சிக்கக் கூடாது. அவர்களுடன் நாம் நீண்ட காலம் பணியாற்றி இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம்" என்று அறிவுறுத்தியாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# விஸ்வகர்மா சமூக நலச்சங்கம் மாதாந்திர கூட்டம்

குத்தாலம், ஜூலை-17:

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் விஸ்வகர்மா சமூக நலச்சங்கம் மாதாந்திர கூட்டம் தனியார் திருமண மண்டப வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு குத்தாலம் தலைவர் என். எஸ்.மோகன் தலைமை தாங்கினார். செயலாளர் சாமிநாதன். துணைத் தலைவர் சரவணன். துணைச் செயலாளர் குமார், ஓய்வு பெற்ற ஆசிரியர் ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர்.

கௌரவத் தலைவர் சம்பந்தம் வரவேற்புரை யாற்றினார். பொருளாளர் ஜி.எஸ்.மணி சிறப்புரையாற்றினார். சிறப்பு



அழைப்பாளராக கஞ்சனூர் புலவர் நடராஜன் கலந்து கொண்டார். தொடர்ந்து 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்கள், நினைவுப் பரிசு வழங்கினார்கள் தொடர்ந்து சங்கத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்டவர்களுக்கு அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. இதில் அனைத்து பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் நிரவி நாடார் சங்கத்தின் சார்பாக பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினத்தை முன்னிட்டு அம்பாள் சத்திரத்தில் அமைந்துள்ள அன்னாரின் அருச்லைக்கு இதன் தலைவர் ராஜசேகரன் தலைமையில் செயலாளர் காளியப்பன் பொருளாளர் செல்வராஜ் ஆகியோர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# அரியலூர் அருகே கீழப்பழுவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா



அரியலூர், ஜூலை.17-

அரியலூர் அருகே, கீழப்பழுவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், கல்வி வளர்ச்சி நாள் விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர், அழகப்பா சிமெண்ட் அரசு மேல்நிலைப் பள்ளிவளாகத்தில், முன்னாள் தமிழக முதல்வர் காமராஜர் 121 வது பிறந்தநாள் விழா, கல்விவளர்ச்சிநாள் விழாவாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர் தா. முருகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ஒருங்கிணைப்பாளர் அசோக்ராஜ் வரவேற்று பேசினார். பெருந்தலைவர் காமராஜரின் சிறப்புகள் குறித்து, ஆசிரியர் சுரேஷ் விளக்கி பேசினார்.

6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு, மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கவிதை போட்டி, கட்டுரை போட்டி, ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி உள்ளிட்டவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட, முதல் மூன்று இடங்களை சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு, பள்ளியின் தலைமை ஆசிரியை தா. முருகேஸ்வரி மற்றும் இருபால் ஆசிரியர்கள், பரிசுகளை வழங்கினர். முடிவில் உதவி தலைமை ஆசிரியை ஸ்ரீ ரேகா நன்றி கூறினார்.கீழப்பழுவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி நாள் விழாவை முன்னிட்டு, பள்ளியில் சத்துணவு சாப்பிடும் மாணவ, மாணவிகள் அனைவருக்கும், சிறப்பு நிகழ்வாக சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது.



சங்கரா ஹார்ட் பவுண்டேஷன் மற்றும் ராமச்சந்திரா மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட குழு சிறப்பு இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். மூர்த்தி தலைமையில் காரைக்கால் வருகை புரிந்து காரைக்காலில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனையில் 2 நாட்கள் இருதய அறுவை சிகிச்சை சம்பந்தமாக அரசு பொது மருத்துவமனையில் நேற்று குழுமியிருந்த சுமார் 300-க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டன. காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் சிறப்பான முயற்சியால் முதல் முறையாக காரைக்காலுக்கு இந்த இருதய சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவேகூலோத்துங்கன் மிசோரம் மாநிலத்தில் ஆட்சியராக பணிபுரிந்த பொழுது இருதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் மிசோரமில் ஆட்சியராக பணிபுரிந்த மாவட்டத்தில் டாக்டர். மூர்த்தி இணைந்து சுமார் 100-க்கும் மேற்பட்டோருக்கு ஆஞ்சியோ மற்றும் இருதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தி முடித்தார். மேலும் இந்த சிறப்பு மருத்துவர்கள் குழு அனைத்து மருத்துவ உபகரணங்களுடன் காரைக்கால் வருகை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்த சிறப்பு மருத்துவ முகாமை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். .

# விழுப்புரம் சாலை விபத்தில் பலியான மூவரின் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை , ஜூலை.17-

விழுப்புரம் கீழ்புத்துப்பட்டியில் உள்ள சந்திப்பு சாலையில் நிகழ்ந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள முதல்வர் ஸ்டாலின், விபத்தில் பலியான 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விழுப்புரம் மாவட்டம், சென்னை - புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில், கீழ்புத்துப்பட்டியில் உள்ள சந்திப்பு சாலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் சென்னையில் இருந்து புதுச்சேரி நோக்கி வந்த கார் ஒன்று மீன் வாங்க காத்துக் கொண்டிருந்த புதுக்குப்பம் மீனவ பெண்கள் மீது மோதியதில் லட்சுமி (45) க/பெ. வல்லத்தான் மற்றும் கோவிந்தம்மாள் (50) க/பெ. கிருஷ்ணன் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தனர் என்றும், திருமதி. செங்கேயம்மாள் (45) க/பெ. அஞ்சாபுலி என்பவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நாயகம் (45) க/பெ. ராமலிங்கம், கேமலம் (46) க/பெ. மூர்த்தி, பிரேமா (45) க/பெ. நாகராஜ் ஆகியோருக்கு சிறப்பான சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய அறிவுறுத்தி உள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களுடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், பலத்த காயமுற்று நாயகத்துக்கு 1 லட்சம் ரூபாயும், லேசான காயத்துடன் சிகிச்சையில் உள்ள மற்ற இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி புதிய நிர்வாகிகள் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் வாழ்த்து



சங்கரன்கோவில்.ஜூலை.17

தென்காசிவடக்கு மாவட்டம்மருத்துவர் அணிக்கு தலைவராக டாக்டர் சுமதி துணைதலைவராக பவித்திரா மாவட்ட அமைப்பாளராக டாக்டர் மணிகண்டன், துணை அமைப்பாளர்களாக டாக்டர்கள் பேச்சியம்மாள், முத்துக்குமார், குருராஜ், சுரேஷ்,ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய நிர்வாகிகள் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏவை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம் உள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயலில் டி.ஜே.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி இரண்டாவது நாளாக கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,டி.ஜே.எஸ் கல்வி குழுமத்தின் இயக்குனர் ஏ.கபிலன் தலைமை தாங்கினார்.டி.ஜே.எஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர் ஞானபிரகாசம் முன்னிலை வகித்தார். இதில்,சிறப்பு அழைப்பாளராக மோட்டிவேஷன் பேச்சாளர் ஜெய்கணேஷ் என்ற இளமாறன் கலந்து கொண்டு கலை மற்றும் அறிவியல் படிப்பை மாணவர்கள் மேற்கொள்வதால் ஏற்படும் பயன்கள் குறித்தும் மாணவர்களை ஊக்குவித்தும் சிறப்புரை ஆற்றி பேசினார். முன்னதாக அனைவரையும் கல்லூரியின் முதல்வர் வி.லக்ஷ்மிபதி வரவேற்றார். முடிவில், கம்ப்யூட்டர் சயின்ஸ் துறைதலைவர் பானுப்பிரியா நன்றி கூறினார்.

# பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விளையாட்டு விழா





காரைக்கால் , ஜூலை.17-

பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விளையாட்டு விழா 13 மற்றும் 14 ஆகிய இரண்டு தினங்களில் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் பல்வேறு தடகள போட்டிகள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினார்கள்.

இதன் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக காரைக்கால் மாவட்ட முதுநிலை காவல் கொண்டு மனிஷ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். அவர் பேசுகையில் மானவர்கள் இலக்கு நோக்கி பயணிக்க வேண்டும். தீய பழக்கங்களுக்கு அடிமை ஆகாது கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். கல்வி ஒன்றே உங்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் அ. புஷ்பராஜ் தலைமை தாங்கினார். மாணவர் விளையாட்டு செயலாளர் கார்த்திக் மற்றும் D. பொண்சிந்து ஆகியோர் ஆண்டு விளையாட்டு அறிக்கை வாசித்தனர்.

இந்த ஆண்டிற்கான தனிநபர் சாம்பியன் பட்டத்தை மகளிர் பிரிவில் மூன்றாம் ஆண்டு மாணவி நிவேதாவும் ஆண்கள் பிரிவில் காமேஷ் கார்த்திக்கும் பெற்றனர். இந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கல்லூரியின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பெற்றனர்.

இந்த விளையாட்டு விழா நிகழ்ச்சிகளை. கல்லூரியின் விளையாட்டு துறை துணை பேராசிரியர் முனைவர் ஜெயசிவராஜன். மாணவர் மன்ற ஆலோசகர் முனைவர் நாராயணன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவர்கள் சிறந்த முறையில் செய்து இருந்தனர்.

# பெருங்களூர் அருகே தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் கற்கும் திறனை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர்



ஆதனக்கோட்டை, ஜூலை.17-

புதுக்கோட்டை ஒன்றியம் பெருங்களூர் முதல் நிலை ஊராட்சிக்குட்பட்ட மனவாத்திப்பட்டி மேட்டுப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள தொடக்கப்பள்ளியிலும் வடவாளம் ஊராட்சிக்கு உட்பட்ட இச்சடியில் உள்ள தொடக்கப்பள்ளியிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தலா 7.43 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் வைப்பறையுடன் கூடிய சமையலறை கூடங்களையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு குறித்த காலத்தில் தரமாக கட்டிமுடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவரவேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பெருங்களூர் ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் இ-சேவை மைய கட்டிடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் தமிழக முதல்வரின் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்வது தொடர்பாக தன்னார்வலருக்கு பயிற்சி அளிப்பது குறித்தும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று விண்ணப்பங்கள் விநியோகித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி இந்த திட்டத்தில் தகுதியான பயனாளிகள் பயனடைய வழிவகை செய்ய வலியுறுத்தியும் எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கீழ் மாணவ மாணவிகள் தொடக்கப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் திறன்கள் குறித்து செயல்படுத்தி வரும் மாணவர்களின் கற்றல் திறன்களை மேம்படுத்தும் வகையில் பெருங்களூர் ஊராட்சி மேட்டுப்பட்டி தொடக்கப்பள்ளியில் செயல்படுத்தப்பட்டு வரும் எண்ணும்எழுத்தும் திட்டத்தின் கீழ் செயல்வழியிலும் விளையாட்டு வழியிலும் மாணவர்களின் வாசிப்பு திறனை மாவட்ட ஆட்சியர் மெர்சி.ரம்யா நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். இந்த நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உதவி கோட்டப்பொறியாளர் கலைவாணி, வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன் ஊராட்சிமன்றத்தலைவர் சரண்யாஜெய்சங்கர் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப் பதவியேற்பு விழா



அறந்தாங்கி, ஜூலை.17-

அறந்தாங்கியில் அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப்பின் புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா நடைபெற்றது.விழாவிற்கு அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப் உடனடி முன்னாள் தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார், உடனடி முன்னாள் செயலாளர் சண்முகவேல் முன்னிலை வகித்தார்.

விழாவில்ரோட்டரிமாவட்டம் 3000த்தின் முதல் பெண் ஆளுநர் ஆனந்தஜோதிராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப்பின் புதிய தலைவராக முருகேசன், செயலாளராக சுப்பு,பொருளாளராக வெங்கட்குமார் உள்ளிட்ட புதிய அறம் அணியை பணியில் அமர்த்தி பேசி,நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் ரோட்டரி மாவட்டம் 3000த்தின் பயிற்றுனர் கான்அப்துல்கபார்கான், மாவட்ட செயலாளர் பீர்சேக்,இணைச்செயலாளர் தங்கதுரை,துணை ஆளுநர் பழனிவேல் உள்ளிட்டோர் பேசினர்.விழாவில் அறந்தாங்கி காவல்நிலையத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், கல்வி உதவித் தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்,சிறந்த சேவையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விழாவிற்கான ஏற்பாடுகளை அறந்தை ரோட்டரி கிளப் பட்டயத் தலைவர் தங்கதுரை தலைமையில்,தலைவர் முருகேசன், செயலாளர் சுப்பு, பொருளாளர் வெங்கட்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் செய்திருந்தனர்.

முன்னதாக அறந்தாங்கி அருகே உள்ள கோங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அறந்தை ப்ரண்ட்ஸ் ரோட்டரி கிளப் சார்பில் சுமார் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் அறம் சுகாதார வளாகம்,பயணியர் நிழற்குடை ஆகியவற்றை ரோட்டரி ஆளுநர் ஆனந்தஜோதிராஜ்குமார் திறந்துவைத்தார்

# உடல் உறுப்பு தானம் செய்த விஜய் மக்கள் இயக்கத்தினருக்கு சீர்காழி அரசு மருத்துவமனையில் அடையாள அட்டை வழங்கி பாராட்டினார் தலைமை மருத்துவர்



சீர்காழி , ஜூலை.17-

உடல் உறுப்பு தானம் செய்த விஜய் மக்கள் இயக்கத்தினருக்கு சீர்காழி அரசு மருத்துவமனையில் அடையாள அட்டையை வழங்கி பாராட்டிய தலைமை மருத்துவர். உடல் உறுப்பு தானம் செய்யும் முறையை எளிமையாக்க அரசுக்கு கோரிக்கை.

நடிகர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட விஜய் மக்கள் இயக்க தொண்டர் அணியினர் உடல் உறுப்பு தானம் செய்ய முடிவு எடுத்தனர். அதற்காக அவர்கள் மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளை நாடி உள்ளனர். ஆனால் மாவட்டத்தில் உள்ள எந்த மருத்துவமனையிலும் உடல் உறுப்பு தானம் செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அருகில் உள்ள மாவட்டமான கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரியை நாடி உள்ளனர். அங்கேயும் அவர்களுக்கு உடல் உறுப்பு தானம் செய்ய வழியில்லை என தெரிவித்துள்ளனர். இருந்த போதிலும் தங்கள் எடுத்த முடிவிலிருந்து பின்வாங்காமல் அண்டை மாநிலமான புதுச்சேரிக்கு சென்று அங்குள்ள மருத்துவ கல்லூரியில் தங்கள் உடல்களை தானம் செய்வதற்கான படிவத்தை பூர்த்தி செய்து வழங்கி வந்துள்ளனர்.

மேலும், அவர்கள் கூறுகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் தங்களைப் போன்று பல இளைஞர்கள் உடல் உறுப்பு தானம் செய்வதில் விழிப்புணர்வு அடைந்துள்ளதாகவும் ஆனால், அவர்கள் உடல் உறுப்பு தானம் செய்ய முன் வரும்போது, அதற்கான வாய்ப்புகள் இங்கே இல்லை என்றும், இதனை அரசு கவனத்தில் கொண்டு அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உடல் உறுப்பு தானம் செய்யும் வசதியினை ஏற்படுத்தி தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நிலையில் பாண்டிச்சேரியில் உடல் உறுப்பு தானம் செய்த விஜய் மக்கள் இயக்க தொண்டரணியினரை, சீர்காழி அரசு மருத்துவமனையில் மருத்துவமனை தலைமை மருத்துவர் ராஜ்குமார் உடல் உறுப்பு தானம் செய்த அடையாள அட்டைகளை வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மயிலாடுதுறை மாவட்ட விஜய் மக்கள் இயக்கம் தொண்டரணி பொருளாளர் விஜய்.சுபன் , தினேஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# பனையஞ்சேரி கிராமத்தில் மிக்ஸியை பழுது பார்த்தபோதும் மின்சாரம் தாக்கி வாலிபர் பலி



ஊத்துக்கோட்டை, ஜூலை17-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பனையஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்தவர் குப்பன்(வயது23) ஆவார்.இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார்.இவர் ஒரு வருடத்துக்கு முன்னர் நர்மதா(வயது22) என்ற இளம் பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.நர்மதா தற்போது 4 மாத கர்ப்பிணியாக உள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு நர்மதா வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது மிக்ஸி பழுதானது.இதனால் தனது கணவர் குப்பனை அழைத்து மிக்ஸியை பழுது நீக்கம் செய்யுமாறு கூறினார்.

இதனால் குப்பன் மிக்ஸியை பிரித்து பழுது நீக்கி கொண்டிருந்தார்.அப்பொழுது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில் குப்பன் மயங்கி விழுந்தார். இதனைக் கண்டு நர்மதா கூக்குரல் இட்டார். உடனடியாக நர்மதா அருகில் இருந்தவர்கள் உதவியுடன் குப்பனை மீட்டு பொன்னேரி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தார். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் குப்பன் ஏற்கனவே இறந்து விட்டார் என்று கூறினர்.

இந்த சம்பவம் குறித்து நர்மதா நேற்று பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.எனவே,போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிற்சங்கம் சார்பில் காமராஜரின் 121–வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



ஊத்துக்கோட்டை, ஜூலை17-

முன்னாள் தமிழக முதல்வர், பெருந்தலைவர் காமராஜரின் 121-வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிற்சங்கம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நேற்று இனிப்பு வழங்கினர்.

பெரியபாளையம் கண்ணப்பர் பேருந்து நிலையதில் உள்ள டாக்டர் அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர், பஸ் நிலைய வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர்,500 பேருக்கு மதிய உணவு,இனிப்பு,வாட்டர் பாட்டில் உள்ளிட்டவைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் கோட்ட தலைவர் குணசேகரன்,கோட்ட செயலாளர் மணி,கோட்ட பொருளாளர் ஆம்ரோஸ், மாநில தலைவர் செல்வராஜ், மாநில பொதுச் செயலாளர் பாரி,மாநில பொருளாளர் ஜேம்ஸ்கென்னடி,மாநில துணை பொதுச்செயலாளர் வரதராஜன்,மாநிலத் துணைத் தலைவர் ரவி, மாநில இணைச்செயலாளர் லோகீஸ்வரன், மாநில இணை செயலாளர்கள் ஜனார்த்தனம், கா.மகாலிங்கம், தலைமை நிலைய செயலாளர் பழனி, மாநில கொள்கை பரப்புச் செயலாளர் தேவராஜ், பி.சேகர்,என்.சகிலா,எளாவூர் சேகர்,சாந்தகுணாளன், ஊத்துக்கோட்டை வழக்கறிஞர்கள் அணி தலைவர் ஆ.சீனிவாசன், விவசாய அணி தலைவர் துரைசாமி,நேதாஜி மக்கள் மன்ற பொதுச் செயலாளர் பி.தேவராஜ், வக்கீல்கள் தண்டபாணி, சுகுமார், குருசாமி, பச்சையப்பன், தஞ்சை ராமச்சந்திரன், பால்ராஜ், உதய பாஸ்கர், குணசேகரன், செல்வராஜ், ராசு, சரவணன், வி.முத்து, ஜனார்த்தனம், பாலாஜி, பாபு, பி.முத்து, நரேஷ், ஹேமந்த்குமார், பார்த்திபன், ராம்குமார், கார்த்திகேயன், ஆதவன், ராஜேஷ் வட்ட நிர்வாகிகள் அசோகன், ரவி, மதியழகன் மன்னுசாமி, குப்புசாமி ஆனந்தன் மற்றும் காஞ்சிபுரம் வட்ட நிர்வாகிகள், திருவள்ளூர் கோட்ட நிர்வாகிகள்,திருவள்ளூர் கோட்ட உறுப்பினர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக சென்னை தலைமை அலுவலக நுழைவாயிலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜரின் திருவுருவ படத்துக்கு சங்கத்தின் சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர்,அனைத்து அலுவலர்களுக்கும்,பணியாளர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.முடிவில், கே.மகேஷ் நன்றி கூறினார்.

# உளுந்தூர்பேட்டையில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் காமராஜரின் 121–வது பிறந்த நாள் விழா



கள்ளக்குறிச்சி, ஜூலை,17_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில்,இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜரின் 121-வது பிறந்தநாள் விழாவைமுன்னிட்டு,உளுந்தூர்பேட்டை திருச்சி மெயின் ரோட்டில் அமைந்துள்ள காமராஜரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சி நகரத் தலைவர் நல்ல. குழந்தைவேல் தலைமையில், உளுந்தூர்பேட்டை வட்டாரத் தலைவர் பெரியசாமி, திருநாவலூர் வட்டாரத்தலைவர் ரவிச்சந்திரன், மாவட்டச் செயலாளர் ராமச்சந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் கதர் ஜோதிவேல், விவசாய பிரிவு தலைவர் பஞ்சநாதன், மொட்டையாண்டி, மற்றும் கட்சி நிர்வாகிகளும் மாணவச் செல்வங்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர் இறுதியில். சேவாதளம் மாவட்டத் தலைவர் மீடியா முருகன் நன்றியுரை தெரிவித்தார்

# ஒரு கோடி மரங்களை நட்டுள்ள காவேரி கூக்குரல் இயக்கத்திற்கு தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பாராட்டு

புதுக்கோட்டை, ஜூலை.17-

தமிழ்நாட்டின் பசுமை பரப்பை அதிகரிக்கும் விதமாக கடந்தாண்டு ஒரு கோடி மரங்களை விவசாய நிலங்களில் நடவு செய்துள்ள காவேரி கூக்குரல் இயக்கத்திற்கு தமிழக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மெய்யநாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.



காவேரி கூக்குரல் இயக்கம் மற்றும் இந்திய நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் (ICAR IISR) சார்பில் சமவெளியில் நறுமணப் பயிர்கள் சாகுபடி செய்வது குறித்த மாபெரும் கருத்தரங்கு புதுக்கோட்டையில் நேற்று (ஜூலை 16) நடைபெற்றது. சுமார் 2,000 விவசாயிகள் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது: மரங்கள் வளர்ப்பதிலேயே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த மரம் தங்கசாமி ஐயா பிறந்த ஊரில் காவேரி கூக்குரல் இயக்கம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. மிளகு, ஜாதிக்காய் போன்ற நறுமணப் பயிர்கள் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப் பிரதேசங்களில் தான் வளரும் என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால், வெப்பம் அதிகம் இருக்கும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சமவெளியில் மிளகு சாகுபடி செய்து அதில் நன்கு லாபமும் பார்த்து வருகின்றனர். விவசாயிகளாகிய உங்களால் தான் இயற்கையையும் சுற்றுச்சூழலையும் காக்க முடியும். வெப்பமயமாதல் என்னும் பிரச்சினை உலகளவில் மிகப்பெரும் அச்சுறுத்தலாக பார்க்கப்படுகிறது.

அதை தடுப்பதில் மரங்கள் வளர்ப்பு மிக முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில், வெப்பமயமாதலுக்கு எதிரான போரில் விவசாயிகளாகிய நீங்கள் முன்களப்பணியாளர்களாக செயல்படுகிறீர்கள். உங்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு தமிழக அரசு தயாராக உள்ளது. காவேரி கூக்குரல் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறனின் வேண்டுகோளின்படி, சந்தன மரங்களை வளர்ப்பதிலும், அதை வெட்டுவதிலும் விவசாயிகள் சந்திக்கும் இடர்பாடுகளை நீக்குவதற்கு தமிழக முதல்வருடன் நான் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்வேன். தமிழ்நாட்டின் பசுமை பரப்பை அதிகரிக்கும் விதமாக கடந்தாண்டு ஒரு கோடி மரங்களை நடவு செய்துள்ள காவேரி கூக்குரல் இயக்கத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன். இந்த ஆண்டு 10 கோடி மரக்கன்றுகளை நட தமிழ்நாடு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது இவ்வாறு அவர் பேசினார்.

# ஜெ.ஜெ.கலை, அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஸ்டீரியோ வேதியியல் சிறப்பு விரிவுரை

புதுக்கோட்டை, ஜூலை.17-

புதுக்கோட்டை, சிவபுரம், ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), வேதியியல் துறை, ரெசனான்ஸ்சங்கம்சார்பில், சிறப்பு விரிவுரையானது நடைபெற்றது. இதில், திருச்சிராப்பள்ளி, புனித வளனார் கல்லூரி, வேதியியல் துறை உதவிப் பேராசிரியர், பிரிட்டோ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, "ஸ்டீரியோ வேதியியல்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.



அவர்தம் உரையில், மூலக்கூறுகளின் கட்டமைப்பை உருவாக்கும் அணுக்களின் இடம்சார்ந்த அமைப்பைப் பற்றிய ஆய்வு மற்றும் அவற்றை கையாளுதல் போன்றவற்றை உள்ளடக்கியது தான் ஸ்டீரியோ வேதியியல் என்று கூறினார். மேலும், அதன் அடிப்படைக் கருத்துகளான, மாற்றியம், மாற்றியத்தின் வகைகள், ஆர்எஸ் வச அமைப்பு பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும், ஸ்டீரியோ வேதியியலானது மருத்துவ துறையிலும், அழகுசாதனப் பூச்சுகள் தயாரிப்பிலும் பயன்படுகிறது என்றும், இறுதியில் இது தொடர்பான போட்டித் தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு எவ்வாறு விடை அளிக்கலாம் என்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். முன்னதாக துறைத் தலைவர் முத்துக்குமார் இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். ஜெகஜீவன்ராம் விருந்தினரைக் கௌரவித்தார். முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களான, ஹரிதா வரவேற்புரையும், முகமது ரியாஸ் நன்றி உரையும் ஆற்றினார்.

# அரியலூர் மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளராக தெய்வ இளையராஜன் நியமனம்

அரியலூர், ஜூலை.17-

அரியலூர் மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளராக, தெய்வ இளையராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.



அரியலூர் மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளராக, தெய்வ இளையராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இது பற்றிய அறிவிப்பை, திமுகமாநிலஇளைஞரணி செயலாளரும், தமிழக விளையாட்டுமேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ளார். இதையடுத்து, திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின், திமுக மாநில இளைஞரணி செயலாளரும் தமிழக விளையாட்டுமேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், திமுக அரியலூர் மாவட்டச்செயலாளரும் தமிழக போக்குவரத்து துறை அமைச்சருமான எஸ். எஸ். சிவசங்கர் உள்ளிட்டோருக்கு, தெய்வ இளையராஜன் நன்றி தெரிவித்துள்ளார்.

திமுக அரியலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக, ஐந்தாவது முறையாக நியமிக்கப்பட்டுள்ள தெய்வ இளையராஜனுக்கு, திமுக இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள், ஒன்றிய துணை அமைப்பாளர்கள், மற்றும் திமுகவினர் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தெய்வ இளையராஜன் ஏற்கனவே, வாலாஜா நகரம் திமுக கிளை செயலாளர், மற்றும் இரண்டு முறை, திமுக இளைஞரணி அரியலூர் ஒன்றிய அமைப்பாளர், நான்கு முறை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் உள்ளிட்ட, பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



▶ மதுரை மாவட்டம் அனுப்பானடி மாநகராட்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 95லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி ஆகியோர் குத்து விளக்கேற்றி திறந்து வைத்தனர், அதை தொடர்ந்து தூய்மை பணிகள் மேற்கொள்ளும் வாகனங்களை கொடியசைத்து பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், துணை மேயர் நாகராஜன்,மாநகராட்சி ஆணையாளர் பிரவீன் குமார், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் புதூர் பூமிநாதன், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் வாசுகி சசிகுமார்,முகேஷ் ஷர்மா மாநகராட்சி கல்விக்குழு தலைவர் ரவிச்சந்திரன், 88 வது வார்டு திமுக வட்டச் செயலாளர் வழக்கறிஞர் தாமோதரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




▶ தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தென்காசி ஆலங்குளம் கடையநல்லூர் ஆகிய மூன்று தொகுதிகளுக்கு தகவல் தொழில்நுட்ப அணியில் தொகுதி ஒருங்கிணைப்பாளர் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் பொறுப்பேற்கும் ஒன்றியம் நகரம் பேரூர் அளவில் ஒருங்கிணைப்பாளர் பொறுப்பிற்கும் மற்றும் மகளிர் சமூக வலைதள பொறுப்பாளர்கள் போன்ற நிர்வாகிகள் ஆகியவைகளுக்கு நேற்று காலை 10 மணி அளவில் குற்றாலம் செங்கோட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ட்ரெஸ்ஸில் ஓட்டலில் வைத்து தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன் தலைமையில், தகவல் தொழில்நுட்ப தென்மண்டல பொறுப்பாளர் மதுரை ராஜா நேர்காணல் நடத்தினார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் நாகராஜ் சரவணன், தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், செல்வம் வீட்டு வசதி வாரியம் சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் ஸ்ரீதர், கார்த்திக், சிங்கக்துரை உட்பட பலர் கலந்து கொண்டனர்.



▶ கந்தர்வக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மஞ்சுளா தலைமையில் நடைபெற்ற ஆண்டாய்விற்கு பிறகு குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். உடன் புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர் இரமேஷ், தலைமையாசிரியர்கள் குழுவினர், பள்ளியின் தலைமையாசிரியர் (பொ), மாவட்டச்சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், முதன்மைக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் வேலுச்சாமி, மாவட்டக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் குரு.மாரிமுத்து மற்றும் ஆசிரியர், ஆசிரியைகள் உள்ளனர்.

# திருமயம் அருகே இருதயபுரம் தொடக்க உயர்நிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா

திருமயம், ஜூலை.17-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகில் உள்ள இருதயபுரம் கிறிஸ்துராஜா தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பேச்சுப்போட்டி கட்டுரை போட்டி ஓவிய போட்டி நடைபெற்றது, பள்ளியின் தாளாளர் அருட்தந்தை சூசை, தலைமையில் பள்ளியின் தலைமை ஆசிரியர் குயிண்டன் முன்னிலையில் விழா நடைபெற்றது



விழாவில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பாரத பறவைகள் அறக்கட்டளை சார்ந்த கீரமங்கலம் உறுப்பினர் பிரபாகரன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தி பேசினார் மற்றும் காமராஜரின் வாழ்க்கை வரலாறு பற்றி சிறப்பாக பேசினார். நிகழ்ச்சியின் இறுதியில் இளையராஜா அறிவியல் ஆசிரியர் நன்றி கூறினார்.

# கட்டியாவயலில் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடிய இல்லம் தேடி கல்வி திட்ட மாணவர்கள்

புதுக்கோட்டை, ஜூலை.17-

புதுக்கோட்டை அருகே உள்ள கட்டியாவலில் இல்லம் தேடி கல்வி திட்ட மாணவர்கள் சார்பாக காமராஜரின் பிறந்த நாள், கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. விழாவில் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, பாட்டுப்போட்டி நடைபெற்றது. போட்டியில் சிறப்பிடம் பிடித்த மாணவர்களுக்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டது.



பின்னர் மாணவர்களுக்கு சர்க்கரை பொங்கல் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை தன்னார்வலர்கள் முனைவர் வினோதா, மீனாட்சி , ஜெயந்தி, சுபாஷினி ஆகியோர் செய்திருந்தனர்.

# பேனா நினைவுச் சின்னத்தை சொந்த செலவில் அறிவாலயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; ஜெயக்குமார்

சென்னை, ஜூலை.17-

முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு சொந்த செலவில் அறிவாலயத்தில் பேனா நினைவுச் சின்னம் வைத்துக் கொள்வதில், அதிமுகவுக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.



சென்னையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "38 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் கட்டப்பட்டது. மறுபடியும் 81 கோடி ரூபாயை கடலில் கொட்ட வேண்டுமா?

அந்த தொகையை எத்தனையோ வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யலாம். சென்னையின் வளர்ச்சிப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யலாம். வடசென்னை பகுதி மேம்பாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்யலாம். தமிழகத்தில் உள்ள கிராமங்களின் மேம்பாட்டுக்கு அந்த 81 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யலாம்.

மெரினா கடற்கரையில் பேனா நினைவுச் சின்னம் அமைப்பதை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்கில், உச்ச நீதிமன்றம் நல்லதொரு, நியாயமான தீர்ப்பை மீனவர்களின் நலன்கருதி கொடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

எனவே, அந்த பேனா நினைவுச் சின்னத்தை உங்களுடைய சொந்தச் செலவில் அறிவாலயத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அதில் எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. அண்ணா அறிவாலயம்கூட, அண்ணா சாலைதானே, அனைவரும் செல்லும் வழியில் அதனைப் பார்த்து செல்வார்கள்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் எழுத்தாற்றலை நினைவுகூரும் வகையில், மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தின் பின்புறம், வங்கக்கடலில் பேனா வடிவ நினைவுச் சின்னம் ரூ.81 கோடியில் அமைக்க தமிழக அரசு அறிவிப்பை வெளியிட்டது. இதற்கு பரவலாக எதிர்ப்பு கிளம்பியது. இதனையொட்டி கருத்துக் கேட்புக் கூட்டங்கள் தமிழகத்தில் நடத்தப்பட்டன. சில கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பின.

இந்நிலையில் நினைவுச் சின்னத்திற்கு அனுமதி கோரி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு தமிழக அரசின் பொதுப்பணித் துறையானது கடிதம் அனுப்பியிருந்தது. இந்நிலையில் மத்திய வனம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் நிபுணர் குழு வங்கக்கடலில் மெரினா கடற்கரையில் பேனா நினைவுச் சின்னம் அமைக்க 15 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளது. ஏப்ரல் 17-ம் தேதி நடைபெற்ற சுற்று சூழல் அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அனுமதி சில நிபந்தனைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.


# சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்றுவோருக்கு ரூ.10 ஆயிரம் வெகுமதி அரசாணை வெளியீடு

சென்னை, ஜூலை.17-

சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்றுவோருக்கு மத்திய அரசின் ஊக்கத் தொகையுடன் மாநில அரசு சார்பிலும் ரூ.5 ஆயிரம் சேர்த்து மொத்தம் ரூ.10 ஆயிரம் வெகுமதி வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் உள்துறைச் செயலர் பி.அமுதா பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: கடந்த மார்ச் மாதம் நடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் இயக்கூர்திகள் சட்டங்கள்- நிர்வாகம் மானிய கோரிக்கையில், "சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவும் நற்கருணை வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏற்கெனவே மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த ரூ.5 ஆயிரம் தொகையுடன், மாநில அரசின் பங்களிப்பாக சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து கூடுதலாக ரூ.5 ஆயிரம் வழங்கப்படும்" என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிவித்தார்.

இதனைப் பெறுவதற்கு சாலை விபத்தில் சிக்கியவர்களை உடனடியாக (கோல்டன் ஹவர்) மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, உயிரை காப்பாற்றியிருக்க வேண்டும். அவர்கள் குறித்த விவரங்களை காவல் நிலையம் அல்லது மருத்துவமனையிடம் பெற்று மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்வர்.




அதில், வெகுமதி பெற தகுதியானவர்கள் குறித்த பரிந்துரையை மாதந்தோறும் போக்குவரத்து ஆணையரகத்துக்கு மாவட்ட நிர்வாகம் அனுப்பி வைக்கும்.

இவ்வாறு தேர்வு செய்யப்படுபவர்களின் வங்கிக் கணக்கில் ஆணையரகம் வாயிலாக ரூ.5 ஆயிரம் வரவு வைக்கப்படும். தங்களது அடையாளத்தை வெளிக்காட்டி கொள்ள விரும்பாதவர்களுக்கு வெகுமதி வழங்கப்படாது. வெகுமதியைப் பெறுவதற்கு சில வழிகாட்டுதல்களையும் போக்குவரத்து ஆணையர் வழங்கியுள்ளார். அதன்படி,

உயிர்களை காப்பாற்றுவோருக்கு விபத்து எண்ணிக்கைக்கு ஏற்ப தலா ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். ஒரே விபத்தில் பல உயிர்களை ஒருவர் காப்பாற்றியிருந்தால் அவருக்கு ரூ.5 ஆயிரம் மட்டுமே வழங்கப்படும். ஒருவரின் உயிரை பலர் காப்பாற்றியிருந்தால் ரூ. 5 ஆயிரம் பகிர்ந்தளிக்கப்படும். ஒரே விபத்தில் பலரின் உயிரை பலர் காப்பாற்றியிருந்தால் அவர்கள் அனைவருக்கும் தலா ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். ரொக்கப் பரிசுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

இவ்வாறு வெகுமதி வழங்குவதற்கு தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு போக்குவரத்து ஆணையர் கோரியிருந்தார். இதை கவனமாக பரிசீலித்த அரசு, ஆணையரின் பரிந்துரையை ஏற்று சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரை காப்பாற்றுவோருக்கு மத்திய அரசின் சார்பில் வழங்கப்படும் தொகையுடன் மாநில சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து ரூ.5 ஆயிரம் வழங்க போக்குவரத்து ஆணையருக்கு அனுமதி அளிக்கிறது. இத்திட்டம் 2026-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரை அமலில் இருக்கும், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# டிஐஜி விஜயகுமார் தற்கொலை: அவதூறு கருத்து பதிவிட்ட 8 பேருக்கு சம்மன்

# தமிழகத்தில் ஜூலை-25ஆம் தேதி மருத்துவ கலந்தாய்வு தொடங்கும்





# செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக இருப்பதால் மக்கள் வரிப்பணம் வீண்


| சென்னை / புதுக்கோட்டை | 17.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பாரதிராஜா , தமிழகத் திரைப்பட இயக்குனர் (பி.1941)



அங்கெலா மேர்க்கெல் , செருமனியின் 8வது அரசுத்தலைவர் (பி.1954)



## இன்றைய நினைவு நாள்

டி. எம். நாயர் , இந்திய அரசியல்வாதி (பி.1868) (இ.1919)




இரா. கிருஷ்ணன் , இந்தியத் திரைப்பட இயக்குநர் (பி.1909) (இ.1997)



மிருணாள் கோரே , இந்திய அரசியல்வாதி (பி.1928) (இ.2012)



இழூல்சு பியான்கி , பிரெஞ்சு வாகன ஓட்ட வீரர் (பி.1989) (இ.2015)



## சர்வதேச நீதிக்கான உலக நாள் (ஐநா)